**நெல் சந்தைப்படுத்தல் சபை - 2020**

நெல் சந்தைப்படுத்தல் சபையின் 2020 திசெம்பர் 31 முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நடவடிக்கைகள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1971 இன் 14 ஆம் இலக்க நெல் சந்தைப்படுத்தல் சபை சட்டத்தின் 30 ஆம் பிரிவு என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(6) ஆம் பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய 2020 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இந்த அறிக்கைத் திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என நான் கருதுகின்ற எனது சபையின் செயற்பாடுகள் தொடர்பான எனது அவதானிப்புக்கள் மாத்திரமே இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைவு ஆண்டறிக்கை என்பன கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளுக்கான நிதிக்கூற்றுக்கள் இந்த அறிக்கைத் திகதி வரையிலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.2 சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் இருக்கும் தன்மை

இறுதியாக சபையால் தயாரிக்கப்பட்ட 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவினங்கள் பற்றிய விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன

| **சொத்துக்கள்/ பொறுப்புக்கள்** | **பெறுமதி** |
|---|---|
| | **ரூபா** |
| நடைமுறையல்லாச் சொத்து | 1,569,049,227 |
| நடைமுறைச் சொத்து | 6,501,271,386 |
| மொத்த சொத்துக்கள் | 8,070,320,613 |
| | |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | 10,049,541,444 |
| நடைமுறையல்லாப் பொறுப்புக்கள் | 12,200,708,514 |
| மொத்த மூலதனம் | (14,179,929,345) |

| | |
|---|---|
| மொத்த பொறுப்புக்கள்/ மூலதனம் | 8,070,320,613 |
| மொத்த வருமானம் | 396,551,485 |
| மொத்த செலவினம் | 1,281,334,002 |
| | ------------------- |
| புற்றாக்குறை | 884,782,517 |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அரசாங்க நெல் கொள்வனவு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நெல் கொள்வனவு செய்வதற்காக 2012 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரை நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு அரச வங்கிகளால் வழங்கப்பட்ட தீர்க்கப்படாத கடன் மீதிகளை முகாமை செய்வதற்காக 2020 மார்ச் 05 ஆம் திகதிய අමප/20/0513/204/042 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது. 2020 யூலை 31 அளவில் மக்கள் வங்கிக்கு செலுத்த வேண்டியிருந்த கடனாக ரூபா 2,846,712,122 தொகை மற்றும் அதற்கான வட்டியாக ரூபா 827,162,934 தொகை என ரூபா 3,673,875,056 கூட்டுமொத்த தொகை மக்கள் வங்கியின் கால கடன்களிற்கு மாற்றப்பட்டிருந்ததுடன் ஆண்டொன்றிற்கு குறித்த கடன்களுக்கு 11 சதவீதத்தில் வட்டியாக ரூபா 1,422,409,942 தொகையும் 8 ஆண்டுகளின் இறுதியளவில் கடன் வட்டிக்கான வட்டியாக ரூபா 413,306,526, தொகையும் என ரூபா 1,835,716,468 கூட்டுமொத்த மேலதிக வட்டி செலுத்தப்பட வேண்டியிருந்தது.

(ஆ) 2012 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரை இலங்கை வங்கியிடமிருந்து பெறப்பட்ட கடன் ரூபா 8,572,952,043 ஆக இருந்ததுடன் அது தொடர்பான அட்டுறு வட்டி ரூபா 1,357,265,772 ஆக காணப்பட்டது. மேலும் அக் கடன் மற்றும் வட்டி ரூபா 9,930,300,000 தொகையாக கால கடனாக மாற்றப்பட்டிருந்தது. சலுகைக் கடன் காலம் உட்பட 96 தவணைகளாக செலுத்துவதற்கும், அந்தக் கடன்களை காலக் கடன்களாக மாற்றுவதன் மூலம் கொடுப்பனவை மேற்கொள்ளும் போது சலுகை கடன் காலப்பகுதி உள்ளடங்கிய 96 மாதங்களினுள் செலுத்துவதற்கும் வட்டியுடன் கடன் தவணையாக மாதம் ஒன்றிற்கு ரூபா 170,030,931 தொகையை செலுத்துவதற்கும் இணங்கப்பட்டிருந்தது. 96 தவணைகளின் இறுதியில் கடன் மற்றும் வட்டியாக செலுத்தப்பட வேண்டிய ரூபா 15,374,931,204 தொகையை சபை மீளச்செலுத்த முடியாதிருந்தமை தொடர்பாக ரூபா 5,444,631,204 தொகையை அரசாங்கம் மேலதிகமாக செலுத்த வேண்டியிருந்தது

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

#### (அ) 2019/2020 பெரும் போகத்தில் நெல்லை கொள்வனவு செய்தல்

(i) 2020 சனவரி 22 இல் உள்நாட்டு வர்த்தகம், உணவு பாதுகாப்பு மற்றும் நுகர்வோர் விவகார அமைச்சால் வெளியிடப்பட்ட "அரசாங்க நெல் கொள்வனவு நிகழ்ச்சித்திட்டம் 2019/20 பெரும்போகம்" எனும் பெயரிலான 2020/03 ஆம் இலக்க சுற்றறிக்கைக்கிணங்க 2019/20 பெரும்போகம் தொடர்பாக விவசாயத் திணைக்களத்தின் எதிர்வுகூறல்களின் பிரகாரம் நெல் உற்பத்திக்கு உத்தேசிக்கப்பட்டுள்ள 3 மில்லியன் மெட்ரிக் தொண் நெல் அறுவடையில் 10 சதவீதமான 300,000 மெட்ரிக் தொண் நெல்லை அரசாங்கத்தின் சான்றுபடுத்தப்பட்ட விலையில் கொள்வனவு செய்வதற்கு மதிப்பிடப்பட்டிருந்த போதிலும், மாவட்ட செயலகங்கள் மற்றும் நெல் சந்தைப்படுத்தல் சபையின் பிராந்திய அலுவலகங்கள் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட நெல் அளவு முறையே 26,383 மெட்ரிக் தொண்

மற்றும் 25,869 மெட்ரிக் தொண் என 52,252 மெட்ரிக் தொண்கள் கூட்டுமொத்தமாகும். இது மதிப்பிடப்பட்ட தொகையில் 17 சதவீதமாக இருந்தது.

(ii) வங்கிக் கடன்களாக வழங்கப்பட்ட ரூபா 4,780 மில்லியன் தொகையில் மாவட்டச் செயலாளர்கள் மற்றும் நெல் சந்தைப்படுத்தல் சபையின் பிராந்திய அலுவலகங்களுக்கு நெல் கொள்வனவு செய்வதற்காக வழங்கப்பட்ட தொகை முறையே ரூபா 1,900 மில்லியன் மற்றும் ரூபா 2,144 மில்லியன் என ரூபா 4,044 மில்லியன் கூட்டுமொத்தமாகும். இதனால் பெறப்பட்ட ரூபா 4,780 மில்லியன் தொகையான வங்கிக் கடனில் ரூபா 736 மில்லியன் தொகை எந்த வகையிலும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(iii) பெரும்போக நெல் கொள்வனவுக்காக 16 மாவட்டங்களின் மாவட்டச் செயலாளர்களுக்கு ரூபா 1,900 மில்லியன் தொகை வழங்கப்பட்டுள்ள போதிலும் அந்தத் தொகையில் ரூபா 597 மில்லியன் தொகை நெல் கொள்வனவிற்காக பயன்படுத்தப்படாமல் திருப்பிச் செலுத்தப்பட்டுள்ளது. மட்டக்களப்பு, மாத்தறை, கண்டி மற்றும் மன்னார் ஆகிய 04 மாவட்டங்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 90 மில்லியன் தொகையில் இருந்து எந்தவொரு கொள்வனவும் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் முழுத் தொகையும் மீளப் பெறப்பட்டது.

(iv) தரநிலையை கருத்தில் கொண்டு நெல் சந்தைப்படுத்தல் சபையினால் சான்றுபடுத்தப்பட்ட விலையின் அடிப்படையில் நெல் கொள்வனவு மேற்கொள்ளப்பட்ட போதிலும் தரநிலை எதனையும் கருத்தில் கொள்ளாமல் தனியார் நெல் கொள்வனவாளர்கள் அரசாங்கக் கட்டுப்பாட்டு விலையை விட அதிக விலைக்கு ஈரநெல்லை கொள்வனவு செய்தமை மற்றும் அரிசி ஆலை உரிமையாளர்கள் நெல் வயலுக்குள்ளேயே நெல் கொள்வனவு செய்தமை போன்ற காரணங்கள் 2019/2020 பெரும்போகத்தில் உத்தேசிக்கப்பட்ட அளவு நெல்லை கொள்வனவு செய்ய முடியாதமைக்கு தாக்கமளித்திருந்தன.

(v) நெல் சந்தைப்படுத்தல் சபையின் திட்டங்களின் பிரகாரம் 2020 ஏப்ரல் இரண்டாம் வாரத்திற்குள் அனைத்து மாவட்டங்களிலிருந்தும் நெல் கொள்வனவு நிறுத்தப்பட வேண்டிய போதிலும் மாவட்டச் செயலாளர்களிற்கு வழங்கப்பட்ட நிதியில் இருந்து ரூபா 597,106,898 தொகை 2020 ஏப்ரல் 15 முதல் ஆகஸ்ட் 23 வரையிலான காலப்பகுதிக்குள் பயன்படுத்தப்படாமல் காலதாமதத்துடன் நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு திருப்பி அனுப்பப்பட்டது. இதனால் நெல் சந்தைப்படுத்தல் சபையினால் பெறப்பட்ட கடனுக்கான வட்டி காலதாமதத்திற்கு மாத்திரமே ரூபா 16,722,933 தொகையாக காணப்பட்டது.

(vi) நெல் சந்தைப்படுத்தல் சபையின் களஞ்சியப்படுத்தல் இயலளவு 304,540 மெற்றிக் தொண்களாக இருந்ததுடன் பெரும்போகத்தின் தொடக்கத்தில் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்ட இருப்புகளின் அளவு 2,596 மெட்ரிக் தொண்களாக இருந்தது. இதனால் 300,000 மெட்ரிக் தொண் நெல்லை கொள்வனவு செய்யும் திறன் இருந்த போதிலும் களஞ்சியப்படுத்தல் இயலளவை விட 91 சதவீதம் குறைவாகப் பயன்படுத்தப்பட்டு, 25,896 மெட்ரிக் தொண்கள் மாத்திரமே கொள்வனவு செயட்யப்பட்டிருந்தன.

**(ஆ) 2020 ஆம் ஆண்டின் சிறுபோகத்தில் நெல் கொள்வனவு**

(i) மகாவலி, விவசாயம், நீர்ப்பாசனம் மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட ''2020 ஆம் ஆண்டின் சிறுபோகத்தில் நெல் கொள்வனவு நிகழ்ச்சித்திட்டம்'' எனும் தலைப்பிலான AG/80/2020 ஆம் இலக்க விஞ்ஞாபனத்தின் பிரகாரம் 2020 ஆம் ஆண்டில் சிறுபோகம் தொடர்பாக விவசாயத் திணைக்களத்தினால் மொத்த நெல் அறுவடை ஏறத்தாழ 2.1 மில்லியன் மெட்ரிக் தொண்கள் என

மதிப்பிடப்பட்டுள்ளதுடன் மொத்த நெல் அறுவடையில் 9.53 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் 200,000 மெட்ரிக் தொண் நெல் இருப்பை கொள்வனவு செய்வதற்கு மதிப்பிடப்பட்டிருந்த போதிலும் நெல் சந்தைப்படுத்தல் சபையினால் 134,500 மெட்ரிக் தொண் நெல் மாத்திரமே கொள்வனவு செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. மேலும், மாவட்ட செயலாளர்கள் மற்றும் நெல் சந்தைப்படுத்தல் சபையின் பிராந்திய அலுவலகங்கள் ஊடாக முறையே 6,024 மெட்ரிக் தொண் மற்றும் 3,866 மெட்ரிக் தொண் என மொத்தம் 9,890 மெட்ரிக் தொண் நெல் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. நெல் சந்தைப்படுத்தல் சபையினால் கொள்வனவு செய்யப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த நெல் தொகையில் இது 7 சதவீதமாகும்.

(ii) 2020 ஆம் ஆண்டின் சிறுபோகத்தில் நெல் கொள்வனவு செய்வதற்காக மாவட்டச் செயலாளர்கள் மற்றும் நெல் சந்தைப்படுத்தல் சபையின் பிராந்திய அலுவலகங்களுக்கு முறையே ரூபா 376 மில்லியன் மற்றும் ரூபா 346 மில்லியன் உள்ளடங்கலாக ரூபா 722 மில்லியன் கூட்டுமொத்த தொகை வழங்கப்பட்டது. அப் பணத்தில் நெல் கொள்வனவு செய்வதற்காக முறையே ரூபா 269 மில்லியன் மற்றும் ரூபா 196 மில்லியன் உள்ளடங்கலாக ரூபா 465 மில்லியன் கூட்டுமொத்த தொகை மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. இது வழங்கப்பட்ட பணத்தில் 64 சதவீதமாக இருந்தது. அநுராதபுரம், பதுளை மற்றும் கண்டி ஆகிய 03 மாவட்டங்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 45 மில்லியன் தொகையில் எந்தப் பணமும் நெல் கொள்வனவுக்குப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை, மேலே வழங்கப்பட்ட பணத்தில், மொத்தப் பணத் தொகையும் நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு மீளளிக்கப்பட்டிருந்தது.